DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–107/2021

Prosecution witness – PW 2

Name : திரு.முருகன் Caste:

Father's Name : Calling:

Village : Religion:

Taluk : Age:

(Accused present)

03.02.2026 – 03.45 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் ஆப்பனூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது சகலை ஆவார். அ.சா.1 எனது மச்சான் ஆவார். நானும் ஆஜர் எதிரியும் ஒரே வீட்டில் பெண் எடுத்துள்ளோம். எனது மாமியாருக்கு சொந்தமாக ஆப்பனூரில் இடம் உள்ளது. அதில் எனது மாமியார் இறந்ததற்கான செலவுகள் அனைத்தையும் நானே ஏற்று அவரை நல்ல முறையில் அடக்கம் செய்தேன். எனது மாமியாருக்கு மூன்று பிள்ளைகள். எனது மாமியாரின் சொத்தை மூன்று பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுத்தது போக 5 செண்டை மட்டும் எனது மாமியாரின் இறப்பிற்கு நான் செய்த செலவிற்கு ஈடாக எனக்கு பகிர்ந்து செய்து கொடுத்தார்கள்

2. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 08.00 – 08,30 மணியளவில் எங்கள் ஊர் டீக்கடை முன்பு நானும் எனது மச்சான் செந்தூரானும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி குருசாமி அங்கிருந்து அருவாள் எடுத்து வந்துள்ளார் நான் அதை கவனிக்காமல் பேசிக்கொண்டிருந்தேன். என் மீது எதிரி வெட்ட வரும் போது செந்தூரான் அந்த அருவாளை வெட்ட வராமல் தடுத்தார். அதில் அவருக்கு இடது கை பெருவிரலில் அருவாள் வெட்டி காயம் ஏற்பட்டது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். நான் எனது மச்சான் செந்தூரானை இருசக்கர வாகனத்தில் ஏற்றி வந்து கடலாடி

அரசு மருத்தவமனையில்சிகிச்சைக்கு சேர்ந்தேன். இந்த சம்பவம் தொடர்பாக செந்துாரான் கடலாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் இது தொடர்பாக போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.03 18:13:43 +0530